**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்**

**O.S. 2/2024**

**பி.வா.சா.1 - மரிய ஆரோக்கியம்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 11.11.2025.**

**முதல் விசாரணை.**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். என் தரப்பு சாட்சியத்திற்கு நான் எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை தற்போது யார் பராமரித்து வருகிறார்கள் என்றால் எனது கடைசி மகனான வாதி ஏசுராஜன் கவனித்து வருகிறார். எனது கணவர் எத்தனை பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தார் மற்றும் வாதி எத்தனை பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் வாதி செலின் மற்றும் அல்போன்சா இருவருக்கும் வாதி வெளிநாட்டில் வேலை பார்த்து உதவி செய்து திருமணம் செய்து வைத்தார். செலின் மற்றும் அல்போன்சா எனது 3 வது மற்றும் 4 வது பிள்ளைகள். வாதியை தவிர்த்து இதர ஆண் குழந்தைகள் மேற்படி திருமணத்திற்கு ஏதேனும் உதவி செய்தார்களா என்றால் இல்லை. 2014 ல் எனது கணவர் காலஞ்சென்ற போது உயில் எழுதி வைத்தாரா என்றால் ஆம் அதில் 2014 ம் ஆண்டு உயிலின் படி வாதிக்கு வீட்டை எழுதி வைத்தார். மற்ற ஆண் குழந்தைகளுக்கு பணக்குடியில் உள்ள சொத்தை கொடுத்தார். எனது கணவர் ஏன் வாதிக்கு வீட்டை எழுதி வைத்தார் என்றால் வாதி இரண்டு குழந்தைகளின் திருமணத்திற்கு உதவி செய்ததால்

வீட்டை எழுதி வைத்தார். 2019 ல் ஏதேனும் உயில் எனது கணவர் எழுதினாரா என்றால் இல்லை. எனது கணவர் கடைசி காலத்தில் உடல் நிலை சரியில்லாமல் படுக்கையில் இருந்தார் என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.